بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுஉத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/07/2026 அன்று U.K – ஆல்டனிலுள்ள ஹதீக்கத்துல் மஹ்தியில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## 2026 ஆம் ஆண்டின் பிரிட்டன் ஆண்டு மாநாட்டை முன்னிட்டு பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்குப் பொன்னான அறிவுரைகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ்வின் அருளால் இன்று பிரிட்டன் ஆண்டு மாநாடு தொடங்குகிறது. நாட்டின் மூலை முடுக்கிலிருந்தும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இதில் பங்கேற்பதற்காக விருந்தினர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் அல்லது வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர்; இவர்கள் ஒரு குறிப்பிட்ட மார்க்க நோக்கத்திற்காக இங்கு வருகை தருகிறார்கள். எனவே, இந்த விருந்தினர்களை உபசரிப்பது என்பதும் ஒரு தனிச்சிறப்பான கண்ணியத்தை கொண்டதாகும்.

அல்லாஹ்வின் அருளால் உலகில் எந்த நாடுகளிலெல்லாம் ஆண்டு மாநாடுகள் நடைபெறுகின்றனவோ, அங்கெல்லாம் உள்ள சிறுவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மாநாட்டின் விருந்தினர்களுக்கு தாம் தொண்டாற்ற வேண்டும் என்பதை உணர்ந்துள்ளனர்; இதற்காக அனைவரும் தங்களை தன்னார்வலர்களாக அர்ப்பணிக்கின்றனர். தற்காலத்தில் உலக மக்களின் முன்னுரிமைகள் மாறியிருக்கின்ற போதிலும், ஜமாஅத்தின் கலப்பற்ற உறுப்பினர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்காகத் தங்களை அர்ப்பணித்து வருகிறார்கள்.

விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதையும் அவர்களைக் கண்ணியப்படுத்தி மரியாதை செய்வதையும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்பதை இவர்கள் உணர்ந்துள்ளனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தமது செயலினாலும் கூற்றினாலும் இதை வலியுறுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களும் இதன் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள்.

“அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள், விருந்தினரின் முறையான உரிமையை நிறைவேற்றுகிறார்கள் அல்லது நிறைவேற்றட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். முறையான உரிமை என்றால் என்ன என்று வினவப்பட்டபோது, ஒரு பகலும் இரவும் விருந்தோம்பல் செய்வதாகும் என்று அன்னார் கூறினார்கள்.”

மற்றோர் இடத்தில், “மூன்று நாட்கள் வரை அவருக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும்” என்றும் அறிவிப்பு காணப்படுகின்றது.

இது குறிப்பிட்ட விருந்தினர்களுக்கானதாகும்; பொதுவாக மக்களின் வீடுகளுக்கு வருகை தருபவர்கள் சில நாட்களுக்காக வருகிறார்கள். பொதுவாக ஏதேனும் ஒரு விருந்தினர் வரும்போது, அவருக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும். இதுவே முஸ்லிம்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும்.

இந்நாட்களில் மாநாட்டிற்காக வருகை தரும் விருந்தினர்கள் தொலைதூரப் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்; பிற நாடுகளிலிருந்து வருகிறார்கள். இவர்கள் மூன்று நாட்களுக்கும் அதிகமாகவே தங்குவார்கள். ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் இவர்கள் எத்தனை நாட்கள் தங்கினாலும், மூன்று முதல் நான்கு வாரங்கள் வரை அல்லது இரண்டு முதல் மூன்று வாரங்கள் வரை (எத்தனை நாட்கள் தங்கினாலும்), ஜமாஅத் இவர்களுக்கு விருந்தோம்பல் செய்கிறது.

மேலும், அல்லாஹ்வின் மாபெரும் அருள் என்னவென்றால், இந்த விருந்தோம்பலைச் செய்வதற்கு இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் ஊதியம் பெறாத பணியாளர்கள் ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கிறார்கள். மூன்று முதல் நான்கு வாரங்கள் வரை தன்னார்வலர்கள் இந்த நோக்கத்திற்காக தம்மை அர்ப்பணிக்கிறார்கள். சொல்லப்போனால், இங்கு பிரிட்டனில் விருந்தோம்பலுக்கான ஏற்பாடு எந்த அளவிற்குப் பரந்து விரிந்துள்ளதென்றால், ஆண்டு முழுவதுமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் 'லங்கர்' (விருந்தினர் இல்லம்) இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனெனில், இங்கு கிலாஃபத் உள்ளது; கலீஃபா இருப்பதன் காரணமாக மக்களின் வருகை இங்கு மிக அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக விருந்தோம்பலும் செய்ய வேண்டியுள்ளது. அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்**: “விருந்தினரின் உணர்வுகள் மிகவும் மென்மையானவை; எனவே, எப்போதும் அவர்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.”

ஆகவே, நாம் விருந்தினர்களுக்கு எல்லா வகையிலும் தொண்டாற்ற வேண்டும் என்பதை நாமும் மறந்துவிடக் கூடாது. நாம் நம்மை அர்ப்பணித்திருந்தால், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இந்த கடமையை நிறைவேற்ற இயன்றவரை முயற்சிக்க வேண்டும்; இதன் மூலம் இந்தத் தொண்டிற்குப் பதிலாக அல்லாஹ்வும் நம் மீது திருப்தியடைவானாக! மேலும், முஹம்மதிய மஸீஹின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றும் உரிமையை நம்மால் இயன்றவரை நிறைவேற்றுவோமாக!

**விருந்தோம்பல் செய்யும் நமது பணியாளர்களையும் நமது மாநாட்டின் ஏற்பாடுகளையும் கண்டு, வெளியிலிருந்து வருகை தரும் ஜமாஅத்தைச் சாராதவர்களும், முஸ்லிம் அல்லாத விருந்தினர்களும் மிகவும் கவரப்படுகிறார்கள்.** போக்குவரத்தைச் சீரமைக்கும் முறை, உணவளிக்கும் முறை, தூய்மைப் பணி, சமையல் பணி, குடிநீர் விநியோக முறை என எண்ணற்றத் துறைகள் இங்கு சிறப்பாக இயக்கப்பட்டு, பணியாளர்களின் ஒரு முழுமையான கட்டமைப்பு செயல்படுவதைக்கண்டு அவர்கள் வியப்படைகிறார்கள். இவற்றில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் தன்னார்வலர்கள் பணியாற்றுகிறார்கள். பிற மக்கள் இதைப் பார்த்து மிகவும் கவரப்படுகிறார்கள்; இதுவும் தப்லீக்கிற்கான ஒரு வழிமுறையாகும்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எந்த அளவிற்கு விருந்தினர்களுக்குத் தொண்டாற்றி வந்தார்கள் என்றால் அல்லது அவர்களைக் கவனத்தில் கொண்டார்கள் என்றால் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது**; அன்னார்

விருந்தினர்களை மிகவும் கவனத்தில் கொள்வார்கள். லங்கரின் விருந்தினர்களைக் கவனித்துக் கொள்வதற்காக ஹஸ்ரத் ஹாஃபிஸ் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தபோது, “இந்த விருந்தினர்களைச் சிறப்பாகக் கவனித்துக் கொள்ளுங்கள்” என்று அன்னார் அவர்களுக்கு கவனமூட்டுவார்கள். மேலும், சாதாரண நாட்களில் விருந்தினர்களின் தகுதிக்கு ஏற்ப அவர்களுக்குத் தொண்டாற்றுங்கள் என்றும் கூறுவார்கள்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தோம்பல் குறித்து பல நிகழ்வுகள் காணக்கிடைக்கின்றன**. அவை அன்னாரின் கருணை, பொறுப்புணர்வு மற்றும் விருந்தினர்களிடம் காட்டிய அழகிய நன்னடத்தை ஆகியவற்றின் சிறந்த முன்மாதிரியை வெளிப்படுத்துகின்றன. மாநாட்டின்போது ஜமாஅத்தின் கூட்டத்தில் பங்கேற்றதன் காரணமாகத் தம்மால் உணவு உண்ண முடியாமல் போனதாக ஹஸ்ரத் டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். கூட்டம் முடிந்து இரவு லங்கர்கானாவிற்கு வந்தபோது உணவு தீர்ந்துபோயிருந்தது. அவர்களுக்கு ரொட்டியின் ஒரு சிறிய துண்டு மட்டுமே கிடைத்தது. அதை அவர்கள் உண்ணத் தொடங்கினார்கள். அப்போது கதவு தட்டப்படும் சப்தமும், யாரேனும் விருந்தினர் பசியோடு இருந்தால் லங்கர்கானாவிற்கு வந்து உணவு உண்ணுங்கள் என்ற குரலும் கேட்டது. மறுநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், “இரவில் அல்லாஹ்விடமிருந்து எனக்கு,

يَا أَيُّهَا النَّبِيُّ أَطْعِمُوا الْجَائِعَ وَالْمُعْتَرَّ

(அதாவது, நபியே! பசியுடையவருக்கும் தேவையுடையவருக்கும் உணவளியுங்கள்) என்று இல்ஹாம் இறங்கியது என்றார்கள்.

இந்த நிகழ்விலிருந்து அல்லாஹ் தன் விருந்தினர்களின் சிரமத்தையும் உணர்கிறான் என்பது புரிகிறது. எனவே, **பயணத்தின் காரணமாக தாமதமாக வருகை தரும் விருந்தினர்களுக்காகவும், ஏதேனும் நிர்பந்தத்தின் காரணமாக குறித்த நேரத்தில் உணவு உண்ண முடியாத விருந்தினர்களுக்காகவும் பொருத்தமான, புதிதாக சமைக்கப்பட்ட உணவுக்கான ஏற்பாடு எப்போதும் இருப்பதை மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், “எனது சீடர்கள் ஏழையாக இருந்தாலும் சரி அல்லது பணக்காரராக இருந்தாலும் சரி, அனைவரும் என் பார்வையில் சமமானவர்களே. எனவே, கறியும் புலாவும் சமைக்கப்பட்டால் அது அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பருப்பு சமைக்கப்பட்டால் அதுவும் அனைவருக்கும் சமமாகவே வழங்கப்பட வேண்டும்” என்று கூறினார்கள். இந்த போதனையின் மூலம் சமத்துவம், நீதி மற்றும் சகோதரத்துவத்தின் உயர் தரம் நிலைநாட்டப்படுகின்றது.

இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிமுறைகளாகவும், அன்னாரின் நடைமுறைகளாகவும், அன்னார் அறிவுரை வழங்கும் விதமாகவும், அன்னாரின் விருந்தோம்பலின் முறைகளாகவும் இருந்தன.

**எவ்வாறிருப்பினும், லங்கர் நிர்வாகத்தின்கீழ் சமைக்கப்படும் உணவு எதுவாக இருந்தாலும், எது கிடைத்தாலும் அதை பொறுமையோடும் நன்றியோடும் உண்ண வேண்டும் என்பதை விருந்தினர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.** நீங்கள் இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அழைப்பின் பேரில் வந்துள்ளீர்கள்;

ஆன்மிக உணவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே வந்துள்ளீர்கள். எனவே, ஆன்மிக உணவின் பக்கமே உங்கள் கவனம் அதிகம் இருக்க வேண்டும்; உணவில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும் சகித்துக் கொள்ள வேண்டுமே தவிர கோரிக்கைகளை வைக்கக் கூடாது. எனவே, இந்த மூன்று நாட்களில் எது கிடைத்தாலும் அதை பொறுமையோடும் நன்றியோடும் உண்ண வேண்டும் என்பதையும், இந்த பொருள் எங்களுக்குப் பிடிக்கவில்லை; நாங்கள் உண்ண மாட்டோம் என்பது போன்ற எந்தவொரு விஷயத்தையும் வெளிப்படுத்தக் கூடாது என்பதையும் விருந்தினர்களும் நினைவில் கொள்ள வேண்டும்.

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்த எச்சரிக்கை உணர்வைக் கொண்ட ஒரு சம்பவத்தை எடுத்துரைத்த பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு அறிவுறுத்தியவாறு கூறுகிறார்கள்:* சமையல் பணியில் உள்ள ஊழியர்களும் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக இந்நாட்கள் கோடைக்காலம் என்பதால் உணவு சரியாகப் பாதுகாக்கப்பட வேண்டும்; நீண்ட நேரம் வைக்கப்பட்டிருக்கக் கூடாது. குறிப்பாக விரைவில் கெட்டுப்போகக்கூடிய பருப்பு போன்றவற்றை நீண்ட நேரம் வைத்து விருந்தினர்களுக்கு வழங்கக் கூடாது. இதை நினைவில் கொள்ள வேண்டும்; மேலும், உணவை வழங்கும் முன் அதை நன்கு பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

எந்த நல்ல நோக்கத்திற்காக நீங்கள் வந்துள்ளீர்களோ அதையே நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்! அப்படி இல்லையெனில் எந்தப் பயனும் இருக்காது. இங்கு தொழுகைகளுக்கான முறையான ஏற்பாடுகள் இருந்தாலும், நீண்ட காலம் தங்குபவர்கள், ஜமாஅத்தின் தங்குமிடங்களில் வசிப்பவர்கள் மாநாட்டிற்குப் பிறகும் தொழுகைகளின் பக்கம் முறையாக கவனம் செலுத்தி வர வேண்டும்; மேலும், ஜமாஅத்தாகத் தொழுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்நாட்களில் இங்கு கூடாரங்களிலும் மார்க்கீக்களிலும் (Marquees) தங்குபவர்கள் அனைவரும், இந்த மூன்று நாட்களிலும் இங்கு தஹஜ்ஜுத் தொழுகை நடைபெறுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தஹஜ்ஜுத் நேரத்தில் எழுப்பப்படும் போது எழ வேண்டும். இதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துங்கள். (ஐவேளை) தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவது இருக்கவே செய்கிறது; அத்துடன், தஹஜ்ஜுத் தொழுகையையும் முறையாகத் தொழுவதற்கு குறிப்பாக முயற்சிக்க வேண்டும்.

*அதன்பின்னர், ஹுஸூர் அவர்கள் வறண்ட வானிலையைப் பற்றி கவனமூட்டினார்கள். தனிப்பட்ட தங்குமிடங்களிலோ அல்லது ஜமாஅத் ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தங்குமிடங்களிலோ எந்தவொரு நெருப்பையும் மூட்டக் கூடாது என்று வலியுறுத்திவாறு கூறும்போது, எந்தவோர் இடத்திலும் அமர்ந்து கொண்டு நெருப்பு மூட்டுவதிலிருந்தும் விலகியிருங்கள். இதன் காரணமாக ஏதேனும் அசம்பாவிதம் நிகழக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருங்கள் என்று கூறினார்கள்.*

*ஹுஸூர் அவர்கள் தூய்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவாறு கூறுகையில், குளியலறைகள் கழிப்பறைகள் மற்றும் பிற இடங்களை தூய்மைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நிர்வாகம் செய்கிறது என்றபோதிலும், பயன்படுத்திய பிறகு தூய்மையைப் பேணுவது ஒவ்வொரு விருந்தினரின் கடமையாகும்; ஒவ்வொரு பணியாளரின் கடமையாகும் என்றார்கள்.*

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸின்படி, தூய்மை ஈமானின் ஒரு பகுதியாகும். ஈமானை அதிகப்படுத்தவே மாநாட்டிற்கு வந்துள்ளதால்,

தூய்மையையும் ஓர் இறைவணக்கமாகக் கருதி அதைப் பேண சிறப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்நாட்களில் ஒவ்வொருவரும் தம்மை ஒரு பணியாளராகக் கருதி, தேவைப்படும் இடங்களில் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

*அத்துடன் ஹுஸூர் அவர்கள், ஈமானின் தரத்தை உயர்த்திக் கொள்வதன் பக்கம் சிறப்பு கவனமூட்டினார்கள்.* ஓய்வு நேரங்களில் அல்லாஹ்வை நினைவு கூருதல், தரூத் ஷரீஃப், இஸ்திக்ஃபார் மற்றும் துஆக்களில் ஈடுபட்டிருங்கள். தேவையற்ற உரையாடல்கள், வீணான பொழுதுபோக்குகள் மற்றும் பயனற்ற பேச்சுகளைத் தவிர்த்து, மார்க்கம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் இறை நினைவை உங்கள் சபைகளின் அங்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறே, மாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு கண்காட்சிகளிலிருந்தும் கண்டிப்பாக பயனடையுங்கள். அவற்றை வெறும் வேடிக்கைப் பொருளாகக் கருதாமல் ஆர்வத்துடனும் கவனத்துடனும் பாருங்கள்; ஏனெனில் அவற்றிலிருந்து கல்வி, வரலாறு மற்றும் மார்க்க அறிவு கிடைக்கப்பெறுவதுடன் மனிதனின் ஈமானும் அறிவும் அதிகரிக்கின்றது.

*(குத்பாவின்) இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறும்போது, மாநாட்டில் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் ஆண்டு மாநாட்டின் மார்க்க அருள்களிலிருந்தும், ஆன்மிக அருள்களிலிருந்தும், கல்வி சார்ந்த அருள்களிலிருந்தும் முழுமையான பங்கினை வழங்கி அருள்வானாக என்றும், இந்த அருள்கள் அவர்களின் வாழ்வில் என்றும் நிலைத்திருந்து அவர்களின் வருங்காலச் சந்ததியினருக்கும் கைமாற வேண்டும் என்றும் பங்கேற்கும் ஒவ்வொருவரையும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக ஆக்குவானாக என்றும் துஆ செய்தார்கள்.*

*மேலும், மாநாட்டின் தொடக்க உரையையும் இதர அனைத்து உரைகளையும் முழு கவனத்துடனும், சிந்தனையுடனும், மனத்தூய்மையுடனும் கேட்குமாறும், அவற்றில் எடுத்துரைக்கப்படும் அறிவுரைகளின்படி செயல்பட முயற்சிக்குமாறும் அறிவுறுத்தினார்கள்.*

அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக - ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى

الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)